OS.No.277/2018 தேதி:22.06.2023

வாதித் தரப்பு சாட்சி – 2 (பானு, க/பெ.பரமசிவம் ) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் திருச்சோபுரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த பூதங்கட்டி கிராமத்தில் வசிக்கிறேன். பரமசிவம் என்பவருக்கு நான் முதல் மனைவி. அவரது 2ம் மனைவி பெயர் ஜெயா. ஜெயா எங்களுடன் ஒரே குடும்பமாக வசிக்கிறார். நான் வசிக்கும் இடம் அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். அந்த சொத்து எனக்கு உரிமையானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இதே தாவா சொத்திற்கு இதே பிரதிவாதிகளை எதிர்த்து தடை உத்தரவு கோரி நானும், என் கணவரும் மற்றும் ஒரு வழக்கு அ.வ.எண்.277/2018 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2. எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். என் கணவர் அ.வ.எண்.277/2018 –ல் ஒரு மின் அட்டை தாக்கல் செய்துள்ளார் அது வா.த.சா.ஆ.4 ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4–ல் கதவு இலக்கம், சர்வே எண், பெயர் ஆகியவை இடம்பெறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் 4 பேர் மாசிலாமணி, சிவக்கொழுந்து, மாயவன், ஏழுமலை இவர்கள் 4 பேரும் தற்போது உயிருடன் இல்லை. தற்போது மாசிலாமணியின் வாரிசுதாரர்கள் – 1.சக்திவேல், 2. சௌந்திரராஜன், 3.சத்தியா – சத்தியாவை வழக்கில் சேர்க்கவில்லை. இன்னொரு மகளை அவர்கள் எடுத்து வளர்த்தார்கள் அவர் பெயர் சரண்யா.

3. தாவா சொத்தின் வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.8–முன்னிலைக்கு தாவா சொத்து சம்மந்தமான கிரையப் பத்திரத்தை ஒரு மாசிலாமணி என்பவரிடமிருந்து மட்டும் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எல்லா வாரிசுதாரர்களிடமிருந்து கிரையம் பெறாமல் மாசிலாமணியிடமிருந்து மட்டும் கிரையம் வாங்கியதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் அவர்கள் கொடுக்கவில்லை அவர்கள் சாட்சியாக மாயவன் மட்டும் கையெழுத்துப் போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 –ல் உள்ள கையெழுத்து மாசிலாமணியின் கையெழுத்து ஆகும். என்னிடம் காட்டப்படும் 21.11.2005ல் பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரம் வா.த.சா.ஆ.2 முன்னிலைக்கு மாயவன், சிவக்கொழுந்து, மாசிலாமணி மற்றும் ஏழுமலை ஆகியோர்களிடமிருந்து தாவா சொத்து கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.3 வீட்டு வரி ரசீதுகளில் என் கணவர் பரமசிவம் பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். என் பெயரில் தாவா சொத்து உள்ளதற்கு எந்த தகுதிவாய்ந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல என் பெயருக்கு பட்டா வழங்கியுள்ளார்கள் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை அனுபவிப்பதற்குண்டான தகுதிவாய்ந்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சாந்தா வகையறாதான் தாவா சொத்தில் நாளது தேதிவரை அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல,

அவர்கள் என் அனுமதியின் பெயரில் தான் தாவா சொத்தில் வசித்து வருகிறார்கள். அந்த அனுமதிக்கு ஆதாராமாக ஆவணம் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

5. அரசாங்க சொத்தில் பல காலமாக பிரதிவாதிகள் வசிப்பதால், நான் பட்டா பெற்றதாக கூறுவது தவறானதாகும். அவ்வாறே நான் பட்டா பெற்றாலும் அந்த பட்டா சட்ட விதிகளின் படி செல்லாது. நான் 1992–லிருந்து தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன். 1992–லிருந்து நாளது தேதி வரை அனுபவத்தில் இருப்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளார்கள் அது அவர்களுக்கு பாத்தியமானது அதனை அபகரிக்கவே இந்த பொய்யான வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல.

6. நான் மேலும் சொத்துக்களை அபகரிக்க மேலும் விஸ்தீரணமாக வீடு கட்டுவதற்கு தடை உத்தரவு கேட்டும் விளம்புகை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்துள்ள 2 வழக்குகளும் தள்ளுபடிக்கு அருகமானது என்றால் சரியல்ல. மாசிலாமணியிடமிருந்து கிரையம் பெற்றுவிட்டு வா.த.சா.ஆ.2 ல் உள்ள தரப்பினர்களின் வாரிசுகளை சேர்த்து மொத்தம் 9 பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் சொத்து போய்விடும் என்ற பயத்தால் இவ்வாறு சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 மாசிலாமணியிடமிருந்து பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரு வழக்கு பரிகாரங்களும் எனக்கு வழங்கத்தக்கதல்ல என்றாலும் செலவுத் தொகையுடம் தள்ளுபடிக்கு அருகமானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.